செய்தித் தாளாகப் பதிவு பெற்றது. வெள்ளிக்கிழமைதோறும் வெளிவருவது

உ
சிவமயம்

# இந்துசாதனம்

சைவபரிபாலனசபை வெளியீடு. பிரதி விலை: சதம் 15

ஆரம்பம்: விரோதி ஞூ (1889) ஆவணி மீ 28உ, அச்சகம்: சைவப்பிரகாசயந்திரசாலை, 450 காங்கேசன்துறைவீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 356

புத்-அஉ] யாழ்ப்பாணம்:- சாதாரண ஞூ சித்திரை மீ ௨௫ உ வெள்ளிக்கிழமை (8-5-1970) [இலக்-௫

# மாபெரும் சைவமாநாடு

**நாள்:** சாதாரண ஞூ சித்திரை மீ 28, 29, 30-ஆந் உ

**திங்கள், செவ்வாய், புதன் (11, 12, 13-5-1970)**

**இடம்: சபை நாவலர் ஆச்சிரம மண்டபம்**

மகாநாட்டுத் தலைவர்:

தருமையாதீனத் தமிழ்ப் புலவர், சித்தாந்தக் கலைமணி,
மகா வித்துவான், முதுபெரும் புலவர்

**திரு சி. அருணைவடிவேல் முதலியார் அவர்கள்**
(தருமபுரம் — தமிழ்நாடு)

சைவாபிமானிகள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**வே. நாகலிங்கம்** — தலைவர்
**மு. மயில்வாகனம்** — சமயப்பிரசார அமைச்சர்
**ஆ தனபாலசிங்கம்** — காரியதரிசி

யாழ்ப்பாணம். 4—5—70

## சித்திரை 28 உ (11-5-70) திங்கட்கிழமை

பிற்பகல்:

தலைவர்:
தருமையாதீனப் புலவர், சித்தாந்தக் கலைமணி
மகாவித்துவான், முதுபெரும் புலவர்
திரு. சி. அருணைவடிவேல் முதலியார் அவர்கள்

| | |
|---|---|
| 4-00— 4-30 | ஆராதனை<br>வண்ணார்பண்ணை வைத்தீஸ்வரன்கோயில் |
| 4-30— 5-30 | ஊர்வலம்<br>கோயிலில் இருந்து காங்கேசன்துறைவீதி வழியாக விழா மண்டபத்தை அடைதல்<br>(பஜனைக்கோஷ்டிகள், நாதஸ்வரக்கோஷ்டிகள் பங்குபற்றும்) |
| 5-30— 5-45 | பூசை<br>சாந்தி மங்கள பாடம்<br>பிரம்மஸ்ரீ கி. தி. சீதாராமசாஸ்திரி அவர்கள் |
| 5-45— 6-00 | தமிழ்மறை ஓதல்<br>பண்ணிசைப் புலவர் P. A. S. இராஜசேகரன் அவர்கள் |
| 6-00— 6-15 | வரவேற்புரை<br>சைவ பரிபாலன சபைத் தலைவர் அவர்கள் |
| 6-15— 6-30 | வரவேற்புப் பா<br>பண்டிதர் க. நமசிவாயம் அவர்கள் |
| 6-30— 8-00 | தலைமைப்பேருரை |
| 8-00— 8-15 | பூசை<br>தேவாரபாராயணம். |

## சித்திரை 29 உ (12-5-70) செவ்வாய்க்கிழமை

முற்பகல்:

தலைவர்
தருமையாதீனப் புலவர் சித்தாந்தக் கலைமணி
திரு. சி. அருணைவடிவேல் முதலியார் அவர்கள்

| | |
|---|---|
| 9-30 - 9-40 | பூசை<br>தேவார பாராயணம் |
| 9-40—10-00 | தலைவர் முன்னுரை |
| 10-00—10-50 | முருக இலக்கியம்<br>பண்டிதர் திரு. பொன். கிருஷ்ணபிள்ளை அவர்கள் |
| 11-00—12-00 | இலக்கியமும் சமய வாழ்க்கையும்<br>திரு. அ. பாலருவாயன் M. A. அவர்கள்<br>பயிற்றுசிரியர், அ. வ. அ. கல்லூரி மாயூரம். |
| 12-00—12-30 | தலைவர் குறிப்புரை<br>தேவாரம் |
| [பிற்]பகல் 3-00— 3-20 | தமிழ்மறையோதல் |
| [3-]20— 3-30 | தலைவர் முன்னுரை |
| [3-]30— 4-20 | தேவார இன்பம்<br>பண்டிதர் செ. சிவப்பிரகாசம் அவர்கள் |
| [4-]30— 5-20 | தமிழ் ஞானசம்பந்தர்<br>பண்டிதை. சைவப்புலவர் தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் |

வளர்ச்சி 3-ஆம் பக்கம்

உ
திருச்சிற்றம்பலம்

வாழ்த்த வாயும்
நினைக்க மடநெஞ்சும்
தாழ்த்தச் சென்னியுந்
தந்த தலைவனைச்
சூழ்த்த மாமலர்
தூவித் துதியாதே
வீழ்த்த வாவினை
யேனெடுங் காலமே

-திருநாவுக்கரசுசுவாமிகள்.

திருச்சிற்றம்பலம்

நல்லை.
ஞான சம்பந்தர் ஆதீனத்தில்

## திருஞானசம்பந்தர் மஹோற்ஸவம்

சித்திரை 27-ம் நாள் (10-5-70) ஞாயிற்றுக்கிழமையும் 11-5-70) திங்கட்கிழமையும் ஞானசம்பந்தர் மஹோற்ஸவம் நல்லை ஞானசம்பந்தர் ஆதீனத்தில் கோலாகலமாக நடைபெறத் திருவருள்கூட்டியுள்ளது ஞாயிறு மாலை 5-00 மணிக்கு ஆதீன மண்டபத்திலிருந்து நல்லைக் கைலாசநாதசுவாமி கோயிலுக்கு ஞானசம்பந்தர் எழுந்தருளலும், ஞானப்பால் உற்சவமும். 11-5-70 திங்கட்கிழமை மாலை [5]-30 மணிக்கு ஸ்ரீ கைலாசநாதப்பெருமான் சன்னிதியில் ஞானசம்பந்தப் பெருமான் பொற்றாளம் பெறுதலும், 6 மணிக்கு உள்வீதி உலாப் போந்து கைலாசநாதப் பெருமானிடம் பல்லக்கு பெறுதலும் அதன்பின் ஆலயத்திலிருந்து புஷ்பப் பல்லக்கில் ஞானசம்பந்தப் பெருமான் பருத்தித்துறை வீதி, கோவில் வீதி, நாவலர் வீதி, வைமன் வீதிவழியாக ஆதீனம் அடைதலும் நிகழும். இரவு 8 மணிமுதல், திருமுறைக் கச்சேரி திரு. பொன். சுந்தரலிங்கம் குழுவினரால் நடாத்தப்பெறும்.




பரிசு பெறுங்கள்
மில்க்வைற்சோப்தொழிற்சாலை
யாழ்ப்பாணம்.

## சைவ மாநாட்டுத் தலைவர்

தருமையாதீனத் தமிழ்ப்புலவர், சித்தாந்தக் கலைமணி
மகாவித்துவான், முதுபெரும் புலவர்,

## திரு. சி. அருணைவடிவேல் முதலியார் அவர்கள்

# வாழ்க்கை வரலாறு

[அகில இலங்கைச் சைவ மகாநாட்டுக்குத் தலைமை வகிக்க தமிழ்நாட்டினின்றும் வரவிருக்கும் தலைவரவர்களுடைய வாழ்க்கை வரலாற்றை இங்குள்ளார் அறியும் விருப்பத்தை அவாறிந்து தமது வரலாற்றைச் சுருக்கமாக எழுதியனுப்பியுள்ளார்கள்.]



தமிழ்ப்புலவர், மகாவித்துவான்
திரு. சி. அருணைவடிவேலு
முதலியார் அவர்கள் ]

தொண்டை நாட்டில் காஞ்சிக்குத் தென்பால் சேயாற்றங் கரைக்கண்ணுள்ள திருமாகறலை (பாடல் பெற்ற தலம்) அடுத்துள்ள புலிவாய் என்னும் ஊரில் தொண்டை மண்டல சைவ வேளாளர் மரபில் 1909 ஆம் ஆண்டு யூலை 15ஆம திகதி பிறந்தேன்.

தந்தையார் பெயர் சிங்காரவேல் முதலியார் தாயார் பெயர் சரவணத்தம்மாள். பரம்பரையாக உபாத்தியாயராயிருந்த வகையில் எனது தந்தையாரிடமே தொடக்கக் கல்வி, நன்னூல், முதலிய இலக்கணங்கள் சிற்றிலக்கியங்கள் புராணங்கள் முதலிய இலக்கியங்கள் திருக்குறள் நாலடியார் முதலிய கீழ்க்கணக்கு நூல்களைக்கற்றேன்

இளமையிலே, நாவலர் அவர்களது பாலபாடங்களையும் சைவ வினாவிடைகளையும் என் தந்தையார் மிகவும் ஆர்வத்தோடு என்னைப் பயிற்றுவித்தார், பாலபாடத்திலுள்ள நீதி வாக்கியங்களை அக்கால வழக்கப்படி நெட்டுருப்பண்ணி ஒப்பிக்கச் செய்தார். சைவவினாவிடைகளையும் அப்படியே. பெரிய புராண வசனங்களைத் திரும்பத் திருப்பப் படித்துக் கண்ணீர் விடுப்பது என் தந்தையார் வழக்கம் இந்த அளவில் ஒரு சிறிது புலமை பெற்றேன்.

1932-ல் தந்தையார் மறைந்தார். பொருளாதார நிலை என்னை 1934-ல் காஞ்சியில் குடிபோகச் செய்தது. குடும்பம் செல்வ நிலை மாறி வறுமைப்பட்டதே அதற்குக் காரணம். 1934-ல் பல்கலைக் கழகத்தில் பிறிலிமினறி வித்துவான் தேர்வில் தேர்ச்சி பெற்றேன். தொல்காப்பியம் சங்க இலக்கியங்களைக் காஞ்சியிலுள்ள புலவரிடம் பயின்றேன். சித்தாந்த சாஸ்திரத்தில் எனக்கிருந்த விருப்பத்தினால் அப்பொழுதே சிலரிடம் கற்றேன் ஒருவரிடத்தில் தனிய நான் இவைகளைக் கற்கவில்லை. பலரிடம் கற்றேன். 1936 சென்னை பல்கலைக்கழகத்தில் தேர்ச்சிபெற்று வித்துவான் பட்டம் பெற்றேன். ஓராண்டு வேலையின்றியிருந்தேன், அவ்வமயம் சிவஞான முனிவரது காஞ்சிபுராணத்திற்கு குறிப்புரையெழுதி காஞ்சிபுரமெய்கண்டார்கழக வெளியீடாக வெளிடச்செய்தேன்.

இளமையிலேயே செய்யுள் இயற்றும் அமைப்பு எனக்கு வாய்த்திருந்தது.

(வளர்ச்சி 2-ஆம் பக்கம்)

**சைவ சமயத்தவர்களின் செய்திப் பத்திரிகை**

THE SAIVAPRAKSA PRESS

திருச்சிற்றம்பலம்

வாழ்க அந்தணர் வானவரானினம் வீழ்கதண்புனல் வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே சூழ்க வையகமுந் துயர் தீர்கவே.

திருச்சிற்றம்பலம்

# இந்துசாதனம்

சாதாரணஞு சித்திரை மீ உரு-உ வெள்ளிக்கிழமை [1970

## சைவ மகாநாடு

திருவருளை முன்னிட்டு யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையார் வழமைபோல சைவ மகாநாட்டை சபை நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் தருமையாதீனத் தமிழ்ப்புலவர் சித்தாந்தக் கலைமணி மகாவித்துவான் முதுபெரும் புலவர் திரு. சி. அருணைவடிவேல் முதலியார் தலைமையில் 11, 12, 13-5-70-ஆம் நாட்களில் நடத்த ஒழுங்குகள் செய்துள்ளார்கள். அவருடன் அவருடைய மகன் திரு அ. பாலறுவாயன் M A. அவர்களும் ஒரு பேச்சாளராக அழைக்கப்பெற்றுள்ளனர். பெருங் கஷ்டங்களுக்கிடையில் இச் சைவ மகாநாட்டை நடத்த வேண்டிய சந்தர்ப்பம ஏற்பட்டுள்ளது. நாட்டில் அரசாங்க சபைத் தேர்தல் பிரசாரம் வெகு வேகமாக நடைபெறுகின்றது அபேட்சகர்களும் அவர்களுடைய அபிமானிகளும் இராப்பகல் ஓய்வின்றித் தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டிருக்கின்றார்கள். அத்தகைய சூழ்நிலையில் மக்கள் உள்ளங்களில் தெய்வம் ஒன்று உண்டு; அத்தெய்வமே உலகத்தைப் படைத்துக் காத்து அழிக்கின்றது உயிர்கள் அவருடைய அடிமைகள் என்ற உண்மைகளை மக்கள் உள்ளங்களில் நிலை பெறச் செய்தல் எங்கள் சபையின் கடனாகும். தேர்தல் காலததில் மக்களிடையில் அன்பு, இன்சொல், இன்னசெய்யாமை புறங்கூறாமை முதலிய அறங்களைப் பெரும்பாலும் காணுதல் முயற்கொம்பாகும். அவ்வறங்களை மக்கள் நினைவு கூருதற்கும் இச் சைவ மகாநாடு சாதகமாகவிருக்கும்.

சமயம் வெறும் பேச்சளவில்தான் காணப்படுகின்றது. சமய போதனைகளை அநுட்டிக்கும் மக்களை காண்பதரிது. இத்தகைய சைவ மகாநாடுகள் மக்களை சமய போதனைகளைச் சாதனை செய்வதற்கும் துணையாகவிருக்கும்.

சைவ மகாநாட்டுக்குத் தலைவராக வருகின்றவர் தொண்டை நாட்டைச் சேர்ந்த சைவ வேளாள மரபைச் சேர்ந்தவர். அவருடைய தந்தையாரிடத்தில் ஆரம்பத்தில் தமிழ் இலக்கண இலக்கியங்களையும் சமய சாத்திரங்களையும் கற்றனர் சென்னைப் பல்கலைக் கழகத்தில் வித்துவான் பரீட்சையில் சித்தியடைந்தனர். கவிபாடும் ஆற்றல் படைத்தவர்.

தமிழ்ப் பணியும் சைவப்பணியுமே செய்துவருகின்றனர் காஞ்சிபுராணத்துக்கு உரையெழுதி வெளியிட்டுள்ளனர். திருமுறைகளுக்குக் குறிப்புரை எழுதி வெளியிட்டிருக்கின்றனர். ஒரு சிவபூஜா துரந்தரர். அத்தகைய பெரியார் சைவமகாநாட்டிற்கு தலைமை தாங்கக் கிடைத்தமை எங்கள் அதிஷ்டமே. அவர்களுக்கு நல்வரவு நவில்கின்றோம்.

## கைகூப்பி வணங்குவோம்!

( திரு. ம. சி. சிதம்பரப்பிள்ளை )

சித்திரைமீ 18-ஆந் திகதி (1-5 70) வெளியான இந்து சாதனத்தில், சைவப் பெரியார் திரு. மு ஞானப்பிரகாசம் பி. ஏ; பி. எஸ்ஸி அவர்களுக்கு, இந்து கலாச்சார நிலையம் — "சுவாமி" என்னும் சிறப்புப் பட்டத்தைச் சூட்டி அப் பெரியாரைக் கௌரவித்த செய்தியைப் படிக்கும் ஒவ்வொரு சைவனும், இப்படிப்பட்ட ஒரு மாணிக்க மணியை சைவ மக்களுக்கு தந்த எம்பிறைவனை சிரந்தாழ்த்தி, கைகூப்பி வணங்குவோமாக,

எல்லாருக்கும் நல்லவரான பேராசிரியரை அறிந்த ஒவ்வொரு சைவ மனும் அவரை நினைத்து மிகவும் பெருமைப்பட வேண்டும். அவரைப்போன்று வெளி மயக்கங்களுக்கு ஆட்படாமல், புனிதமே போர்வையாகவும், சித்தாந்தச் செல்வமே முத்திக்கு வழியாகவும் கடைப்பிடித்து, தமது முழு வாழ்வையும் தியாகம் செய்து வாழ்ந்து வருகின்றவர்கள் சிலரினும் சிலரே!

இக் கால ஆசிரியர்கள் குழாம — சைவச் செம்மல் — கடமை வீரர் — ஞானப்பிரகாசரிடமிருந்து படிக்க வேண்டிய ஒரே ஒரு பாடம் சைவ வாழ்வே! சைவ வாழ்வை ஒவ்வொரு ஆசிரியனும பின்பற்றினல், நாவலர் ஐயா பயிரிட்டதும் அவர்களது வழி வந்த பண்டிதமணி கணபதிப்பிள்ளை அவர்கள் நீருற்றி வளர்த்து வருவதுமான சைவம், ஆல மரம் போன்று விழுது விட்டுப் படர்ந்து பலருக்கும் பாதுகாப்பளிக்கும்.

ஆசிரியர்களது சவைக்கு அளவுகோள் இல்லை.

கல்வியும் சமயமும் பல்கி பெருகும் யாழ்ப்பாணக் குடா நாட்டில், நல்லாசிரியர்களுக்கு ஒருபோதும் பஞ்சம் ஏற்பட்டதில்லை; கோவில்களைப் பின்பற்றி கலாசாலைகளே சைவ சமயத்தை வளர்த்துவரும் ஆலயங்கள். ஆகவே, நாம் சுவாமி ஞானப்பிரகாசர் அவர்களை கைகூப்பி வணங்குவோம்.

## கந்தபுராணம் நவீன கற்பக தரு

பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள்

( முன்வளர்ச்சி —2 )

ஆரியம் வேறு; தமிழ் வேறு. ஆரியர் வேறு; தமிழர் வேறு. வேதம் வேறு; ஆகமம் வேறு கர்மத்துக்கும ஞானத்துக்கும சம்பந்தமில்லை. சாதியில்லை; சமயமில்லை என்கின்ற கூக்குரல்கள், தெரிவுகாலங்களில் ஒலிபெருக்கி மூலம் குழறுதல்கள் போன்றனவே. தீவினையாலெழுந்தமயக்கத்தின் அறிகுறிகள் அவைகள், நோய்க்குணங்கள் அவைகள்.

பாரததேசம் புண்ணிய பூமி அது மிலேச்சபூமியாய மாறுகின்றது. சித்சர்களாகிய மகான்கள கண்ணுக்குப் புலமாகாது மறைந்து வாழுகின்றார்கள். கோயில்கள் கல்வித்தாபனங்கள் போலக் குடிபோன கட்டடங்களாய் விட்டன. பாரத நாடு பாரக இராமயணங்களை அவைதிகங்களை ஆலிங்நனம் செய்கின்றது. இவ்வாறு நெறிபிறழ்ந்து கிடக்கும் தாய் நாடு சேய் நாடாகிய இந்த ஈழநாட்டிலும் கால்கோள் செய்கின்றது.

ஈழநாட்டிலே சிறப்பாக யாழபபாணத்திலே எவ்விதப் பிறவிப் பிணியும் அணுகாமல் பாதுகாதது வநத ஒரே புத்தகம் கந்தபுராணம்; அது அமிர்த சஞ்சீவி.

ஆண்டு தோறும் கோயில் தோறும் கந்தபுராணம படிக்கப்பட்டு வந்த காலத்தில மனிதர்கள் தேவர்களாய் விளங்கினார்கள். தேவாசுரர்களின் உயர்வு தாழ்வுகள், வீழ்ச்சி எழுச்சிகள், பல நூறு சரித்திரமாய் விரிவுபெறறது கந்தபுராணம். கநத புராணத்தைப் பக்திசிரத்தையோடு பயிலப் பயிலப் 'புன்னெறியதனிற் செலலும்' போக்கு மெல்ல மெல்ல நழுவ, மேலாம நன்னெறியை நாடும் ஒழுக்கம் தலைப்பட்டு வந்தது, உதிரத்தில் கந்தபுராணம் கலந்திருந்தது. சென்ற நூற்றாண்டுப் பெண்களின் இரத்தம் கந்தபுராண இரத்தம். அவ்வாறாகிய இரத்தத்திலே தான் ஒரு ஆறுமுகநாவலர் உதித்தது. இப்பொழுதைய பெண்கள் நவீன கல்விமயமாயிருக்கின்றார்கள். அவர்கள் இரத்தத்தில் கந்தபுராண மணமுமில்லை. முதலில் கந்தபுராணத்தைப் பெண்களின் உதிரத்திற் கலந்து ஓடச்செய்ய வேண்டும். இதுகைகூடுமானல், கரிந்த பொன்னகர் பழைய சுவர்க்கமாயவாறு போல, யாழ்ப்பாணம், தானும் உய்ந்து, ஏனைய நாடுகளுக்கு வழிகாட்டியாயும் விளங்கும்.

'இந்திரராகிப் பார்மே
லின்பமுற் றினிதுமேவிச்
சிந்தையில் நினைந்தமுற்றிச்
சிவகதியதனிற் சேர்வர்
அந்தமி லவுணர்தங்கள்
அடல்கெட முனிந்த
சேவ்வேற்
கந்தவேள் புராணந்தன்னைக்
காதலித் தோதுவோரே'

[இக் கட்டுரை நுணசை முருக மூர்த்தி கோவிலில் 19—4—70 அன்று நடைபெற்ற கந்புராணச் சொற்பொழிவுகளை ஒட்டி வெளியிடப்பட்டது]

## சைவமாநாட்டுத் தலைவரவர்கள்

(1-ம் பக்கத்து வளர்ச்சி)

அதனால் எங்கள் குலதெய்வமாகிய சிறி அண்ணாமலையாருக்கு ஆண்டு தோறும் திருக்கார்த்திகையில ஒரு பிரபந்தம பாடி வெளியிட்டு வருகின்றேன். இது 1927ம் ஆண்டு முதல் நடைபெறறு வருகிறது. 1938ல் காஞ்சிபுரம் தேவஸ்தான ராமசாமிஐயர் நடுநிலைபள்ளியில் தமிழ் ஆசிரியனாக அமர்ந்தேன். 1939ல் ஓராண்டு சிதம்பரத்தில்தங்கி போதனாமுறை பயிற்சி பெற்று மீண்டும் அப்பள்ளியில் சேர்ந்தேன்.

1942-ல் காஞ்சிபுரம் பச்சையப்பன் உயர்பள்ளியில் ஆசிரியனாக அமர்ந்து 19ஆண்டுகள் பணியாற்றினேன் 1962 முதல் இக்கல்லூரியில் பேராசிரியராக பணியாற்றி வருகின்றேன்,

பேச்சு வன்மையும் எழுத்து வன்மையும் ஓரளவு எனக்கு இருக்கின்றகாரணத்தால் திருமுறைகளுக்கு குறிப்புரையெழுதி வருகின்றேன். "ஞான சம்பந்தம்' பத்திரிகைக்கு துணையாசிரியனயிருக்கின்றேன்.

தருமையாதீன முதற் குரவர் அருளிச் செய்த சிவபோகசாரம் என்னும் நூலுக்குப் பேருரை என்னால் எழுதப்பட்டு 1 47ல் ஆதீன வெளியீடாக வெளிவந்தது. தருமையாதீனத் தலைவர் தருமையாதீனப்புலவர் என்ற பட்டமும் பதக்கமும வழங்கினார்கள். மதுரை ஆதீனத் தலைவர் 1956ல் சித்தாந்தக் கலைமணி என்ற பட்டத்தை வழங்கினார்கள். காஞ்சிபுரம் தொண்டைமண்டல ஆதீனத்தில் மகாவித்துவான் என்னும் பட்டமும் வழங்கப்பட்டது. சென்ற 1969ல் குன்றக்குடி மகாசந்நிதானம் முதுபெரும் புலவர் என்ற பட்டமும் வழங்கினார்கள். தமிழ் பணியும், சைவ பணியும இயன்றளவில் எழுத்தாலும், சொல்லாலும் செய்து வருகின்றேன். எனது மனைவி பெயர் அருணைவல்லி, ஆனல் வழங்குவது வச்சிராம்பாள், முதல் வைத்தபெயர் அவளைபிறந்த பொழுதே எனக்கு கொடுப்பதன்ற முடிவினல் வைக்கப்பட்டது. எனக்கு பெண்கள் நால்வர், மூவர் மணம் செய்யப்பெற்றிருக்கிருர். ஒருத்திக்கு மணம் நடைபெற வேண்டும். மான் ஒருவனே.

THAMBY & Co.

ACCEPT

I. Fixed Deposits
at the following Rates of Interest
1. Year 9 % per annum
FOR CHARITABLE INSTITUTIONS
12 % per annum
INTEREST IS PAYABLE ANNUALLY
N. B. These Deposits could be Withdrawn
At Any Time by Giving the Firm
30 DAYS WRITTEN NOTICE

II. Call Deposits
THESE DEPOSITS COULD BE WITHDRAWN
by giving the FIRM
7 Days Notice — Interest @ 7% per annum

III. Savings Deposits
at the following RATES OF INTEREST
6 % per annum on MONTHLY MINIMUM BALANCES
10 % { " " " " "
FOR CHARITABLE INSTITUTIONS

Head Office: THIRUNELVELY, JAFFNA
Branch ,, : VANNARPONNAI, JAFFNA

# வெள்ளி விழா

**தருமையாதீனம்
மகாசன்னிதானமவர்களின்
அருளாட்சி**

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுரம் ஆதீனம் 25 ஆவது பட்டம் "மகா சந்நிதானமாக" பதவி ஏறுறுக்கொண்டு அருளாட்சியை உலக மக்கள் போற்றிப் புகழும் வண்ணம் நடாத்தி வருகின்ற ஸ்ரீ ல. ஸ்ரீ. கயிலை சுப்பிரமணிய தேசிக ஞான சம்பந்த பரமாசாரிய சுவாமிகளின் "அருளாட்சி" யின் 25 ஆவது ஆண்டு நிறைவின் "வெள்ளிவிழா" வை சித்திரைத் திங்கள் சதய நட்சத்திர நாளன்று, தில்லையம்பதி ஸ்ரீ நடராஜப் பெருமான் திருக்கோயிலில், பொது தீக்ஷிதர்கள் கடந்த 100 ஆண்டு காலத்திற்குள் மக்கள் கண்டிராதவகையில் ஸ்ரீ. ல. ஸ்ரீ. கயிலைமகாசந்நிதானம் அவர்களின் அருளாட்சியின் வெள்ளி விழாவை சிறப்பாக நடாத்தி வைத்தார்கள், வெள்ளிவிழாக் காட்சி பெரும் திருவிழாக்காட்சியாகவே ஸ்ரீ நடராஜப் பெருமான் திருவருளால் அமைந்திருந்தன. ஆஸ்திக பெருமக்கள் ஆண்களும் பெண்களும் நிறைய வநது கூடிவிட்டனர்.

பேரம்பலம் என்று கூறும் தேவசபையில் அமர்ந்து பொது தீக்ஷதர்கள் 200 நபர்களுக்கும் பத்தாறு புத்தாடைகளுடன் ஸ்ரீ சிவகாம சுந்தரிசமேத ஸ்ரீ நடராஜப் பெருமானுக்கு அர்ச்சனை செய்து பிரசாதம் வழங்க அர்ச்சனை செய்யக்கூடி பொருள்களுடன் ஒவ்வொருவருக்கும் போய் 3½ (மூன்றரை) வீதம் தட்சணையும் வழங்கிஇர்கள்.

பொது தீக்ஷதர்கள் ஆனி—மார்கழி மகோற்சவ தேர் — தரிசன விழாக்களில் ஸ்ரீ சிவகாம சுந்தரி சமேத ஸ்ரீ நடராஜப் பெருமானுக்கு பூட்டப்படும் திருவாபரணம் பூராவும், ஸ்ரீ ல. ஸ்ரீ கயிலைமகா சந்நிதானம் அவர்களின் வெள்ளி விழாவை முன்னிட்டு விசேஷமாக இன்று அலங்கரித்து, இரவு 8 மணி 2 ஆவது கால பூசையின்போது ஸ்ரீ. ல. ஸ்ரீ. கயிலைமகா சந்நிதானம் அவர்களை தரிசனம் செய்து வைத்து பிரசாதங்கள் வழங்கினர்கள்.

பொது தீக்ஷிதர்கள் ஸ்ரீ. ல. ஸ்ரீ. கயிலைமகா சந்நிதானம் அவர்களை தேவசபைக்கு அழைத்து அமரச்செய்து பாராட்டு வாழ்த்துப் பாக்கள் வாசித்து அளித்து, சுமார் ரூபாய் 500/– மதிப்பில் 108 சன்னருத்திராக்ஷ மணிகளுக்கு பவுனல் கொப்பிகள் கட்டி, நடராஜப்பெருமான் திருவுருவம் பொறித்த பவுண் பதக்கத்துடன் கூடிய ருத்திராக்ஷ மாலையையும், பேரம் மலர் மாலையை அணிவித்து பொது தீக்ஷதர்களின் பாராட்டுதல்களை தெரிவித்துக் கொண்டார்கள்.

கயிலை மகாசந்நிதானம் அவர்கள் பொது தீக்ஷதர்களின் பாராட்டுதல்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொண்டார்.

-(எமது சிதம்பரம் நிருபர்)
**திரு. மா பாலசுப்பிரமணியன்**

## வைரவமடை விழா

யாழ். திருவண்ணை நகர், அரசடி விநாயகர் ஆலய வருடாந்த அலங்காரத் திருவிழாப் பூர்த்தியை (வைரவர்மடை) முன்னிட்டு நாளை 9-5-70 சனிக்கிழமை மாலை 6 மணிக்கு விசேஷ அபிடேக ஆராதனை நிகழும். மாலை 7 மணிதொடக்கம் யாழ். நாயன் மார்கட்டு சைவ சமய அபிவிருத்திக் கழகத்தினர் பஜனை நடாத்துவர். அதனையடுத்து விஸ்வஸ்ரீ கா. சண்முகலிங்கம் அவர்களால் திருமுறைப் பண்ணிசைக்கச்சேரியும், 'அளவையூர்சஞ்சீவி' 'அருட்கவி' சீ. விநாசித்தம்பி அவர்களால் "பாலனுய்வந்த பழனிஆண்டவர்' என்னும் பொருள்பற்றிய சங்கீதகதாப்பிரசங்கமும் இடம்பெறும்.

## அருள் தருவாய்!

பல்லவி

கந்தா அருள்தருவாய் கஞ்சபதம் பணிந்தேன்
வந்தாள் விரைவாய் எனை! நல்லைநகரின் [கந்தா]

அநுபல்லவி

பந்தத் தொடராலே நொந்தேன் குருநாதா!
எந்தன் துயர்தீர வந்திங்கருள் வாயே [கந்தா]

சரணம்

தந்தைக் குபதேசம் செய்த குருநாதா!
சிந்தைசெய் இருமாதர் விந்தை மணவாளா!
எந்தையும் தாயும் நீ என்றிருக்கின்றேனே!
முந்தைவினை தீர்க்கும் முத்துக்குமரையா! [கந்தா]

[பாடல்: நல்லைக் குமரன்]

## நல்லை நாவலர்

இராகம்: பாகேசுவரி — தாளம்: ஆதி

பல்லவி

நல்லை நாவலர் நலமுறு பாவலர்
தில்லைக் காவலர் அருள்பெற்ற சீலர் (நல்லை)

அநுபல்லவி

சொல்லும் பொருளும் சேர்த்தே தெரிந்து
அல்லும் பகலும் அயராது உழைத்தவர் (நல்லை)

சரணம்

ஆதியாம் சைவத்தின் ஆட்சியை அறிந்து
சோதியாம் கூத்தனின் மாட்சியை உணர்ந்து
பாமரமக் களுக்குப் பக்குவநிலை தெரியத்
தேவருமே மகிழ முத்திநெறி காட்டிய (நல்லை)

[இயற்றியவர்: கூ. சு. ப்புலவர் பொன் தெய்வேந்திரன்]

## கோட்டு விறபனவு விளம்பரம்

திண்ணைபவலம் ஆறுமுகம் சுப்பிரமணியம், 13வது மைல் போஸட், காரைநகர் —வழக்காளி
வழ: இல M. B. 7742 எதிராக
செல்லையா இரகுநாதர், முதலாம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம். எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B 7742ம இலக்க வழக்கில் எனக்கு கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் இரு துண்டுக்காணிகளை 1970ம ௵ வைகாசி ௴ 30-ந் திகதி (30-5-70) சனிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தந்தக் காணிகளுக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல் வட்டி ரூபா 15,508/– 11-10-65 தொடக்கம் 16–1–68 வரைக்கும் ரூபா 10,000/–க்கு 14%வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கு வரை 5%வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 583/– கொடுக்கப்பட்ட ரூபா 9,500/– குறைய

ஆதன விபரம்

1. வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப் பகுதி வண்ணார்பண்ணை கோவிற்பற்று வண்ணார்பண்ணை தெற்கு மேற்கிறை 'சேனைகன் தறை" இதன் நிலப்பரப்பு 1½ எல்லை கிழக்கு சுப்பிரமணியம் இராமச்சந்திரனின் ஆதனம், வடக்கு காசிநாதர் ஆறுமுகமும் பேரம்பலம் சின்னப்புவின் ஆதனங்கள் மேற்கு முத்துக்குமாரக் குருக்களின் உரிமைகாரரின் ஆதனம். தெற்கு ரேட்டு, பதிவு D 187/262

2. வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக யாழ்ப்பாணம் முதலாவது பிரிவு. யாழ்ப்பாணப் பட்டினம், சுண்டிக்குளி கோவிற்பற்று கரையூர் இறை நிலப்பரப்பு 2, குழிகள் 15½ வீடும். கட்டிடங்களும், அதற்குள் சேர்ந்தவைகளும், எல்லை கிழக்கு ரேட்டு, வடக்கு சுப்பிரமணியம் குருநாதரின் ஆதனம், மேற்கும் தெற்கும் வெஸ்லியன் மிஷனுக்குச் சேர்ந்த ஆதனம் இதடங்கலும் பதிவு D. 278/298

வே. கோபாலபிள்ளை
22. ஆஸ்பத்திரி வீதி, கொம்மிஷனர் & விலைமதிப்பாளர்
யாழ்ப்பாணம். 1-4-70. எம் 40 1—5—70.

## கோட்டு விறபனவு விளம்பரம

காரைநகர் மேற்கு, கருங்காலி கதிரவேலு சரவணமுத்து
இல. M. B. 8132 எதிராக - வழக்காளி
1: காரைதீவு மேற்கு, முருகேசு தம்பையா
2. காரைநகர் மேற்கு, தங்கோடை வேலுப்பிள்ளை விக்கினேஸவரனும்
3. ஷை பெண் அன்னம்மாவும் —எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின், M B. 8132-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் துண்டுக்காணி 1970-ம ௵ ஆடி ௴ 1-ந் திகதி (1-7-70) புதன்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல் வட்டி ரூபா 3,942–88 இதில் ரூபா 3500/–க்கும் 30–4-66 தொடக்கம் 10–7–68 வரைக்கும் 100 க்கு 10 வீத வட்டியும் அதன்பின் 10-7-68 தொடக்கம் முழுத்தொகைக்கும் இறுக்கும் வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 603-91 செலவழித்த ரூபா 459–27 வெளியாத்துச்செலவு ரூபா 72–32 எதிர்வரும் செலவு ரூபா 72–32 செலவு ரூபா 150/–ம் கொடுபட்டவகையில் ரூபா 1000/–யும் செலவில் ரூபா 150/– கழிபடவேண்டியது.

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தீவுப்பகுதி காரைதீவு கோவிற்பற்று காரைதீவு மேற்கிறை 'கொட்டைப்புலம்" பரப்பு. 7¼ ஆறும் அளவிலபடியும் ஆட்சிப்படியும் ப. நி. 9 (ஒன்பதும்) பனைகளும், வடலிகளும், தென்னைகளும், செய்பயிர் வாண்பயிர்களும, வீடுகளும், இணறும் எல்லை கிழக்கு: வேலுப்பிள்ளை பெண் சவுந்தரநாதினதும் சங்கரப்பிள்ளை பெண் நாகம்மாவினுதனங்கள். வடக்கு: மாரிமுத்து பெண் அன்னமுத்துவினுதனம். மேற்கு ஆறுமுகம் தம்பிராசாவினுதனம், தெற்கு: ரேட்டு, இதடங்கலும் C. 327/22ல் பதியப்பட்டிருக்கிறது

இல. 24, முதலாம் குறுக்குத்தெரு, க. சுப்பிரமணியம்
யாழ்ப்பாணம், கொம்மிஷனரும் விலைமதிப்பாளரும்
28—4—70 எம். 52 8—5—70

[ 1-ஆம் பக்கத்து வளர்ச்சி ]

# சைவ பரிபாலன சபை

## அகில இலங்கைச் சைவ மகாநாடு

5-20— 6-30 ஞானம் ஈசன்பால் அன்பே
சித்தாந்தக் கலைமணி சி. அருணைவடிவேல் முதலியார் அவர்கள்
6-30 – 9-00 திருமுறை இசை விருந்து
தேவாரமணி திரு. P. A. S. இராஜசேகரன் மாணவிகள்
கடவுளாராதனை, தேவாரம்;

### சித்திரை 30உ (13-5-70) புதன்கிழமை

தலைவர்
சைவப் புலவர்மணி
திரு. த. குமாரசுவாமிப்பிள்ளை அவர்கள்

முற் பகல் 9-30— 9-40 பூசை, தேவார பாராயணம்;
9-40 – 10-00 தலைவர் முன்னுரை
10-00— 11-00 சிவம் பெருக்கும் பிள்ளையார்
தருமையாதீனப் புலவர்
திரு. சி. அருணைவடிவேல் முதலியார் அவர்கள்
11-10—12-10 சேக்கிழார் தெய்வத் தமிழ்
திரு. அ. பாலகுருவாயன் M. A, அவர்கள்
பயிற்குசிரியர் அ. வ. அ. கல்லூரி மாயூரம்
12-10—12-30 தலைவர் குறிப்புரை
தேவாரம்;

பிற்பகல்:

தலைவர்:
சித்தாந்த வித்தகர்
திரு. வே. நாகலிங்கம் J. P; U. M. அவர்கள்
(தலைவர், சைவ பரிபாலனசபை, யாழ்ப்பாணம்)

3-00— 3-20 தேவார பாராயணம்
3-20— 3-35 தலைவர் முன்னுரை
3-35— 4-30 சைவ நாற்பாதம்
பண்டிதர் மு. கந்தையா, B. A.
4-30— 4-45 தீர்மானங்கள்
4-45 – 5-00 சைவப்புலவர் முதலிய தேர்வுகளில் சித்தியடைந்தவர்கட்கு தராதரப் பத்திரம் வழங்குதல்.
5-00— 6-00 வன்றொண்டரது வன்மையும் மென்மையும்
தருமையாதீனப் புலவர் திரு. சி. அருணைவடிவேல் முதலியார் அவர்கள்
6-00— 6-15 நன்றியுரை
சித்தாந்த சிரோமணி திரு. மு. மயில்வாகனம் அவர்கள்
6-30— 9·00 திருமுறைப் பண்ணிசைக் கச்சேரி
காஞ்சீபுரம் மெய்கண்டாராதீனப் பண்ணிசைப் புலவர் தேவார இன்னிசைச் செல்வன், தேவாரமணி, தமிழ் இசைமணி P. A. S. இராஜசேகரன் அவர்கள்
பூசை, தேவார பாராயணம்;

☞ 12-ஆம் 13-ஆம் தேதிகளில் மத்தியான போசனம் அளிக்கப்படும்.

## சைவ பரிபாலன சபையினரால்

நடாத்தப் பெற்ற அகில இலங்கை ரீதியான
சைவ முறை, திருவருட்பயன்

## மனன எழுத்துப் போட்டிகளிற் பரிசு பெறுபவர்கள்

**நான்காம் வகுப்பு**
1-ம் பரிசு: செல்வி. சாந்தா தலுசாமி
2-ம் பரிசு: செல்வி. மகேஸ்வரி மூக்கப்பிள்ளை
3-ம் பரிசு: செல்வி. கலைவாணி சண்முகலிங்கம்
செல்வி: இராஜேஸ்வரி கந்தசாமி

**ஐந்தாம் வகுப்பு**
1-ம் பரிசு: செல்வி: வசந்தகுமாரி அங்குமுத்து
2-ம் பரிசு: செல்வி: புஷ்பவதி நடேசபிள்ளை
3-ம் பரிசு: செல்வி: சரோஜினி திருப்பதிபிள்ளை

**ஆறாம் வகுப்பு**
1-ம் பரிசு: செல்வி: புஷ்பலீலா இராமலிங்கம்
2-ம் பரிசு: செல்வி: ஜெயலட்சுமி மூக்கப்பிள்ளை
3-ம பரிசு: செல்வி: கோவிந்தம்மா பெருமாள்

**ஏழாம் வகுப்பு**
1-ம் பரிசு: செல்வி: சிமாட்டி கந்தசாமி
2-ம் பரிசு: செல்வி: செந்தாமரை வெள்ளைச்சாமி
3-ம் பரிசு: செல்வன்: சி. உலகநாதன்

**எட்டாம் வகுப்பு**
1-ம் பரிசு: செல்வி: கோமதி கிருஷ்ணசாமி
2-ம் பரிசு: செல்வி: சந்திரா அங்கமுத்து
3-ம் பரிசு: செல்வி வசுந்தவதேவி பெரியசாமி

**க. பொ. த. ஆரம்ப வகுப்பு**
1-ம் பரிசு: செல்வி: பரமேஸ்வரி கந்தசாமி

**க. பொ. த. இறுதி வகுப்பு**
1-ம் பரிசு: செல்வன்: மு. பரமானந்தம்
2-ம் பரிசு: செல்வி: புஷ்பம் மூக்கப்பிள்ளை
3-ம் பரிசு: செல்வன். நா. பாலசுப்பிரமணிய சர்மா

## வேலணை - மேற்கு மகாகணபதிப் பிள்ளையார் கோயில் தேர்

வேலணை - மேற்கு மகாகணபதிப்பிள்ளையார் கோயில் தேர்த்திருவிழா எதிர்வரும் 19 5–70 செவ்வாய்க்கிழமை பிற் பகல் 2 மணியளவில் நிகழவிருக்கிறது. (விசேட பஸ்சேவையும் உண்டு)

## பிரிவிடுதல் நொத்தீஸ்

பருத்தித்துறை டிஸ்திறிக் கோட்டில்

இல: 10734

கரவெட்டி வடக்கு, கந்தவனம் முத்துக்குமாரு —வழக்காளி

எதிராக

1. கரவெட்டி வடக்கு சிதம்பரப்பிள்ளை சோமசுந்தரம் 2. பெண் செல்லம்மா 3 மூத்ததம்பி சுப்பிரமணியம் 4. பெண் தங்கம்மா 5. இராமலிங்கம் செல்லத்துரை 6. பெண் தங்கம் 7 நடேசபிள்ளை கைம்பெண் இராசம்மா 8. வயிரமுத்து மகள்மகேஸ்வரி 9. வயிரமுத்து மகள் இராஜேஸ்வரி 10. ஆறுமுகம் இரத்தினராசா 11. பெண் ஜெயமனோகரி 12 நடராசா வைத்தியநாதன் 13. பெண் புவனேஸ்வரி 14. சிதம்பரப்பிள்ளை கைம்பெண் மீனாட்சிப்பிள்ளை 15. நடராசா கோவிந்தராசா 16. நடராசா இராமகிருஷ்ணன் 17. V. தம்பிப்பிள்ளை 18. V. நவரத்தினம் 19. பெண் சிவபாக்கியம் 20. கணபதி கிட்டிணபிள்ளை 21. பெண் செல்வநாயகம் 22. அப்பாத்துரை கனகரத்தினம் 23. பெண் தவமணிதேவி 24. வல்லிபுரம் மகள் தெய்வானை

எதிரிகளுக்கு கரவெட்டி குறிச்சியிலுள்ள வடமராட்சிப் பகுதி குஞ்சுமுளமைப்புலம் நி பர. 13¾ என்னும் ஆதனம் அல்லது ஆதனங்களை 1951-ம் ஆண்டின் 16-ம் இலக்கப் பிரிவிடுதற் கட்டளைச்சட்டத்திற்கமைய மேற்படி கோட்டில் மேற்படி இலக்கத்தில் ஓர் பிரிவிடுதல் வழக்கு தொடரப்பட்டிருக்கின்றதென்று இத்தால் மக்களறிவிக்கப்பட்டிருக்கின்றது.

மேற்படி வழக்கில் எதிரிகள் மேற்படி கோட்டில் 1970ம் ஆண்டு வைகாசி மீ 15-ம் திகதி 10 மணிக்குச் சமுகமளிக்கும்படி கட்டளை பண்ணப்பட்டிருக்கிறார்கள்.

கோட்டாரின் கட்டளைப்படி
வே. நடராசா
பிரதம லிகிதர்/சக்கிடுத்தார்
1970ம் ஆண்டு சித்திரை மீ
1-ம் திகதி

---

## பிரிவிடுதல் நொத்தீஸ்

மருத்தித்துறை டிஸ்திறிக் கோட்டில்

வழ. இல: M B 10721

1. உடுப்பிட்டி இராமலிங்கம் சுப்பிரமணியம்
2. பெண் நாகம்மா

—வழக்காளிகள்

எதிராக

1. கரணவாய் தெற்கு சிதம்பரப்பிள்ளை வயித்திலிங்கம் 2. பெண் கமலாதேவி (3) சரவணமுத்து செல்லத்துரை 4. பெண் இராசம்மா (5) சரவணமுத்து தம்பி ஐயா 6. பெண் ஞானரட்னம 7. இராமலிங்கம் இரத்தினம் 8. பெண் செல்லம்மா 9. ஆறுமுகம் தர்மலிங்கம் 10 பெண் மங்கையற்கரசி 11 முகாவில இளையதம்பி சின்னத்தம்பி 12. இளையதம்பி கணபதிப்பிள்ளை 13. நிலாவெளி திருகோணமலை இளையதம்பி ஆறுமுகம் 14 முகாவில் நாகமுத்து மண்டலம் 15 பெண் அன்னம்மா.

—எதிராளிகள்

எதிரிகளுக்கு உடுப்பிட்டி இறைநேரியவத்தை கில பர 24 என்னும் ஆதனம் அல்லது ஆதனங்களை 1951-ம் ஆண்டின் 16-ம் இலக்கப் பிரிவிடுதற் கட்டளைச் சட்டத்திற்கமைய மேற்படி கோட்டில மேற்படி இலக்கத்தில் ஓர் பிரிவிடுதல் வழக்கு தொடர்ந்திருக்கின்றதென்று இத்தால் மக்களறிவிக்கப்பட்டிருக்கின்றது.

மேற்படி வழக்கில் எதிரிகள் மேற்படி கோட்டில் 1970-ஆம் ஆண்டு வைகாசி மீ 15 ஆம் உ 10 மணிக்குச் சமுகமளிக்கும்படி கட்டளை பண்ணப்பட்டிருக்கிறார்கள்.

கோட்டாரின் கட்டளைப்படி,
வே அ. நடராசா
பிரதமலிகிதர் சக்கிடுத்தார்,
1970-ம் ஆண்டு சித்திரை 1 உ.

---

## கோட்டு விற்பனவு விளம்பரம்

சண்முகம்பிள்ளை கைம்பெண் பாறுவதிப்பிள்ளை,
கோப்பாய் வடக்கு —வழக்காளி

வழ: M. B. 9504 எதிராக

1. சிவகுரு நடராசா 2 சிவகுரு செல்லத்துரையும் பெண்
3. இரத்தினேஸ்வரி எல்லாரும் நீர்வேலி —எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B 9504 ஆம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் துண்டுக்காணி 1970-ஆம் ஆண்டு ஆனி மீ 1-ம் திகதி (1-6-70) திங்கட்கிழமை முற்பகல் 10-00 மணிக்கு அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல் வட்டி ரூபாய் 7075/- 19-10-67 தொடக்கம் 11-6-68 வரைக்கும் ரூபாய் 5000/- 10 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும் வரை 5வீத வட்டியும் கோட்டுச்செலவு ரூபாய் 452-20

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் கிழக்குப் பகுதி கோப்பாய்கோவிற்பற்று நீர்வேலியிலுள்ள சிவகாவுடை' விலப்பரப்பு 10, 5/8 பரப்பு வரைகளாலும் பனை ஒன்று கிழக்கும் மேற்கும் தெற்கும் ஒழுங்கை வடக்கு இராசரத்தினம் பெண் அன்னலட்சுமியின் ஆதனமும், ஒழுங்கையும், இதடங்கலும்

"கமலபதி" — மு. நவரத்தினராசா
ஆஸ்பத்திரி வீதி, — கொமிசனரும், விலைமதிப்பாளரும்
மண்டைதீவு. 29-4-70 — எம். 42 8—5—70

---

## Commission Sale

## கோட்டுக்கொமிஷன் விற்பனவு விளம்பரம்

பருத்தித்துறை டிஸ்திறிக் கோட்டில் இல: 6570

1. புலோலி மேற்கு, முருகப்பர் பொன்னுச்சாமி கைம்பெண் கனகம்மா —வழக்காளி

எதிராக

1. பருத்தித்துறை தற்காலம் நல்லூர், ஆறுமுகம் வைரமுத்து [நடராசா
2. டிெ பெண் சிவானந்தம்
3. டிெ சின்னத்தம்பி கந்தையா } மரணம் (Dead)
4. டிெ பெண் இராசம்மா

மேற்குறித்த இலக்க வழக்கில் தீர்ந்த தீர்வைப்படியும் குறித்த கோட்டால் எனக்குக் கிடைத்த கொமிஷன் அதிகாரப்படியும் இதன்கீழ் விபரிக்கப்படுமாதனங்கள் 1970ம் ஆண்டு யூன்மீ 22-ம் திகதி (22—6—70) திங்கட்கிழமை முற்பகல் 9 30 மணி தொடக்கம் குறித்த காணிகளிடமாகவிருந்து என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப் பகுதி நல்லூர் கோவிற்பற்று நல்லூர் இறை குஞ்சிக் கண்டன் வளவும், மறுபிரிவுகளும். சேதுவந்தன வளவும் மறுபிரிவுகளும் 4½ ஆனால் 1952ம் ஆண்டு வைகாசி மீ 27ம் திகதி உலாந்தா மேஸ்தர் வே. சிவரத்தினத்தால் 1154 ம் இலக்கத்தில் வரைந்த வரைபடத்தின் படி வில 3 குழி 16, 3/32 கல்வீடுகள், கிணறு பயிர்களும் இன்னும் இதற்குச் சேர்ந்தவைகளும், எல்லை கிழக்கு: ரோட்டு வடக்கு: சின்னத்தம்பி கந்தையாவுக்குரிய ஆதனமும், மேற்கும் தெற்கும்: பிரதம உடையார் கைம்பெண் நாகேஸ்வரிக்கும் மறு பேருக்குமுரிய ஆதனமும் இவ் வெல்லைகளுட்பட்டவைகள் முழுவதும் (மதிப்பிட்ட விலை ரூபா 50,000)

| | | |
|---|---|---|
| தீர்வைத்தொகை ... ... ரூபா | 35,906 | 00 |
| இந்த ரூபா 35,906க்கு 5வீதப்படி 6மாதத்துக்கு வட்டி | 895 | 00 |
| செலவு தொகை — | 500 | 00 |
| | 37301 | 00 |
| 6-11-67 ல் கொடுபட்டது. | 5000 | 00 |
| | 32301 | 00 |
| வட்டி ரூபா 32,301/-க்கு 5 வீதப்படி 6-11-67 தொடக்கம் 17-8-68 வரை 9 மாதம் | 1210 | 00 |
| | 33511 | 00 |
| 6-8-68 லும் 17-8-68 லும் கொடுபட்டது (ரூபா 6000/- + 9000/-) | 15000 | 00 |
| | 18511 | 00 |
| வட்டி ரூபா 18511/-க்கு 5 வீதப்படி 18-8-68 தொடக்கம் 17-3-69 வரை 7 மாதம் | 539 | 00 |
| | 19,050 | 00 |
| வட்டி ரூபா 19050/-க்கு 5 வீதப்படி 17-3-69 தொடக்கம் 17-9-69 வரை | 1428 | 75 |
| | 20478 | 75 |
| 3-12-69 ல் கொடுக்கப்பட்டது. | 2000 | 00 |
| | 18478 | 75 |
| வட்டி ரூபா 18,478க்கு 5 வீதப்படி 3-12-69 தொடக்கம் 3-6-70 வரை | 77 | 00 |
| மொத்தம் ரூபா | 18,555 | 75 |

சிவலிங்கநிலையம், — க. நல்லலிங்கம்
வி. எம். ரோட் — ஏலவிற்பனையாளர் & விலைமதிப்பாளர்
பருத்தித்துறை 3-5-70 — எம். 45 8—5—70

---

## அடைவு நகை ஏல விற்பனவு விளம்பரம்

அரசாங்க உத்தரவுடன் காரம்பன் ஊர்காவற்றுறையில் அடைவு பிடிக்கும் திருமதி. சிவகலை கனகரத்தினம் அவர்களின் அடைவு கடையில் 1966ம் ஆண்டு தை மீ 1-ம் திகதி தொடக்கம் 1968ம் ஆண்டு மார்கழி மீ 31-ம் திகதி வரை அடைவு வைக்கப்பட்டு மீட்கப்படாதிருக்கும் நகைகள் யாவும் என்னால் 1970-ம் ஆண்டு ஆனி மீ 1-ம் திகதி திங்கட்கிழமை முற்பகல் பத்து மணிதொடக்கம் டிெ அடைவு கடையில் இருந்து பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

காரைநகர்; 1970 ஆண்டு சித்திரைமீ 29-ந் திகதி
வை. ஏரம்பமூர்த்தி
எம் 37. 1, 8-5-70 — ஏலவிற்பனையாளர்

---

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் றிக்குவெஸ்ற் கோட்டில்

வழக்கு இல: M. B. 9943

1. இலகுப்பிள்ளை இராசதுரை மனைவி
2. பாக்கியம் கட்டுவன் —வழக்காளி

எதிராக

நாகன் கைம்பெண் மூத்தி தனக்காகவும் காலஞ்சென்ற வல்லி நாகனுக்காகவும் சட்டப்படி பிரதிநிதியாக நியமிக்கப்பட்டவ —எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B 9943-ஆம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் துண்டுக்காணி 1970-ம் ஆண்டு வைகாசி மீ 25-ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 0-00 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:— முதல்வட்டி ரூபா 1928ம் 28-4-68 தொடக்கம் 6-8-68 வரைக்கும் ரூபா 1000 க்கு 10 வீத வட்டியும் அதன் பின் முழுத் தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 303 சதம் 4 இதில் ரூபா 350 கழிக்கப்படவேண்டும்

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாண டிஸ்திறிக் வலிகாமம் வடக்குப் பகுதி தெல்லிப்பழை கோவில்பற்று கட்டுவனிறை விளியிட்டி விலப்பரப்பு 4 குளி 4½ ஆனால் ஆட்சிப்படி விலப்பரப்பு 5 (ஐந்து) இதில் மேற்குப் பக்க குளி 3, 1/2, யும் கிழக்குப் புறமாக விலப்பரப்பு 2 குளி 2 நீக்கி மிகுதி விலப்பரப்பு 2 குளி 14, 1/2 யும் இதில் வடக்குப் பக்கமாக குளி 4, 1/2 நீக்கி மிகுதி விலப்பரப்பு 2 இரண்டு) குளி 10 (பத்தும்) எல்லை கிழக்கு வல்லி தம்பனுக்குரிய ஆதனம். வடக்கு வல்லி தம்பனுக்குரிய ஆதனமும் வல்லி நாகமுத்துவுக்குரிய ஆதனமும் மேற்கு கையொழுங்கை. தெற்கு ஒழுங்கை. இவ்வெல்லைபடி இதடங்கலிற் பிற காணிகளுக்குத் தண்ணீர் இறைக்கிற வழி வாய்க்கால் பாவிப்பும் வட கிழக்கு மூலையில் நிற்கும் ஒரு தென்னை புறநீங்கலாக மிகுதி முழுவதும். இன்னும் வடமேற்கு மூலையில் இருக்கும் கிணற்றில் இதற்குரிய பங்கும் தூர்வையில் நிற்கும் நான்கு தென்னைகளும்.

"கமலபதி" — மு. நவரத்தினராசா.
மண்டைதீவு, — கொமிசனரும் விலைமதிப்பாளரும்.
25-4-70 — எம் 41. 8—5

---

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில்

சத்தியசீலன் பெண் காலஞ்சென்ற ஜெகதாம்பாளின் தத்துவகாரன் செல்வத்துரை சத்தியசீலன் ஆலங்குளி, சண்டிலிப்பாய்

இல: T 2415 எதிராக —தத்துவகாரன்

சத்தியசீலன் சத்திருமாரும் வேறு இருவரும் —எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டு T/2415ம இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் நகைகள் 1970ம் ஆண்டு ஆனி மீ 11-ம் திகதி (11—6—70) வியாழக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

நகைகளின் விபரம்

(a) ஒரு சோடி காதணிகள் ¼ பவுண்
(b) ஒரு தாலிக்கொடி 5¾ பவுண்
(c) இரண்டு சோடி காப்பு 3¼ பவுண்

கலைமணி பொ. செல்வக்குமாரசுவாமி
"கலை இல்லம்" — கொமிசனரும், விலைமதிப்பாளரும்.
அராலி வடக்கு, வட்டுக்கோட்டை
1970ம் ஆண்டு வைகாசிமீ 3-ம் திகதி — M 46 8-5-70

---

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றம்

கார்த்திகேசு அருளம்பலத்தின் மகள் பொன்னம்மா. அரசடி ரோட், வண்ணார்பண்ணை கிழக்கு, யாழ்ப்பாணம்.

இல T.R. 46 எதிராக —வழக்காளி

1. வே. கந்தசாமியின் மனைவி தங்கம்மா
2 வேலுப்பிள்ளை கந்தசாமி இருவரும் அரசடி ரோட், வண்ணார்பண்ணை யாழ்ப்பாணம். —எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் T. R./46 இலக்கவழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் துண்டுக்காணி 1970ம் ஆண்டு யூன் மாதம் 1ம் திகதி (1—6—70) திங்கட்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் யாழ்ப்பாணப்பகுதி வண்ணார்பண்ணை கோவிற்பற்று வண்ணார்பண்ணை வடமேற்கு இறை "இராசாளிக்குளக்கரையும் சிறுவேலியும்" வயற்பரப்பு 12ம் எல்லைகள்: கிழக்கு சீனியர் சுப்பையாவின் ஆதனம், வடக்கு: தெற்கு ரோட்டு, மொகமட் மீரான் கண்டு மரைக்கார் சுல்தான் அப்துல் காதர்மேற்கு: தம்பி மரைக்காரின் விதவை அசன்கண்டு அம்மாவினதும் பங்குதாரர்களினதும் காணி ஒடுமடத்திலிருந்து கன்னுண்டாய்க்கு போகும் பாதையில் உள்ளது.

க, சிவஸ்கந்தா
நீதிமன்ற விற்பனை ஆணையாளரும்,
நாகேந்திரமடம், — மதிப்பாளரும்
வட்டுக்கோட்டை. 30 4-70, — M 47. 8—5—70

---

வான்முகில் வழாதுபெய்க, மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசுசெய்க குறைவிலாது உயிர்கள் வாழ்க
நானமறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்

---

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையாருக்காக, வண்ணார்பண்ணை காங்கேசன்துறைவீதி 450-ம் இலக்கத்திலுள்ள சைவப்பிரகாச யந்திரசாலையில், 2ம் நம் இரண்டாமொழுங்கை பிறவுன் வீதியில் வசிக்கும் திரு. மு. மயில்வாகனம் அவர்களால் 8—5—1970 வெள்ளிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது,
பத்திராதிபர் திரு. மு. மயில்வாகனம் அவர்கள்